
(For private circulation only )

# Bethel Tidings

**October 2018**


**A BILINGUAL MONTHLY BULLETIN OF BETHEL METHODIST CHURCH**



*Selfishness separates the servants from the Sovereign*

# BMC - Harvest Festival 2018






Volume 12 - 10

**Contents** **Page**


| Contents | Page |
|---|---|
| BMC English Harvest Festival 2018 | 2 |
| Pastoral Letter - English | 3 |
| Pastoral Letter - Tamil | 4 |
| Biography - Reuben | 6 |
| Kids Corner | 7 |
| யோசனையில் பெரியவர் | 8 |
| Discipline of Prayer (Tamil) | 11 |
| The First Aid Box | 12 |
| Prayer Diary - October | 14 |
| Discipline of Prayer (Tamil) - Continued | 17 |
| Tamil & English Bible Quiz | 20 |
| BMC Programs Schedule - October | 22 |
| WMC Programs Schedule - October | 26 |
| Outreach updates | 27 |
| BMC & WMC Pulpit Calendar | 28 |


**Bethel Methodist Church**
21&22, Bethel Nagar, 1st Main, Off Kodigehalli Road,
K.R.Puram Hobli,
BANGALORE - 560 036.
www.bmcbangalore.org

Sr. Pastor: **Rev. P Koilraj**
Asst. Pastor: **Rev. Joshua Das**

Cell: 80072 75630
E-mail: Pastor.blr.bmc@gmail.com

# Pastoral Letter



Greetings in Jesus' name who is Over all!

The Lord kept us safe last month and provided us with all the facilities to live a peaceful life even though we went through certain difficulties. Our God is our provider and our protector, and we need to be always thankful to Him.

Last month we had a few special programmes including WMC Harvest Festival and a Prayer seminar. This month we are going to celebrate the Harvest Festival in BMC on the first Sunday (7th October) for the English congregation and 14th October is Teens and Youth Sunday.

This month we are going to meditate on the following theme. **"SELFISHNESS SEPARATES THE SERVANTS FROM THE SOVEREIGN"** The use of money is an integral part of our lives without which we cannot live in this world. For example we need money for our food, transport, medicines, clothing, and many other essential things of daily living.

The Bible is not against the use of money, but it condemns us for greed. Although money is essential, it can neither help us ‘purchase’ life on earth nor can it lead us to eternal life. No one can bribe God to live a long life on this earth. Greed for money leads us to concentrate on ourselves, not on our majesty, the Lord. Think which is of eternal value, following the Lord or running after money? Love of money can make us compromise our values and take short cuts and wrong routes to earn it. This can never bring about anything good, we would have toiled in vain and added pain and bitterness to our life. When money becomes all important, there is no place for God, family relationships, fellowship or friendship.

The Bible commands man to work and to earn money but never to run after it or hold on to it. Let me quote an example from the Bible. The rich young man who came to Jesus with the desire to inherit eternal life, went back with a saddened heart since he loved his money too much to let go of it (Matt.19:22). The Apostle Paul warns the young preacher Timothy that he needed to be free from the love of money (I Timothy 6:10,11) and flee from the temptation to get rich and instead to pursue righteousness, godliness, faith, love, endurance and gentleness. As we meditate on this theme this month, let us read and meditate the given text and come to church to learn God’s Word and receive His blessings. I greet everyone who celebrates his/her special day in this month. I pray for God’s special blessings to be upon you all.

May the Lord bless us all!
Yours in His Church Ministry,
Rev. P. Koilraj.



## போதகர் மடல்

அனைத்துக்கும் மேலான இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள்!

போன மாதத்தில் தேவன் நம்மை சுகத்தோடு பாதுகாத்தார். ஒரு சில கஷ்டங்களின் வழியாக நாம் கடந்து வந்தாலும் எல்லாவிதமான வசதிகளையும் நமக்கு பூர்த்தியாய் தந்து சமாதானமாக வாழ உதவிசெய்தார். நம் ஆண்டவர் போஷிக்கிறவராகவும், பாதுகாப்பவராகவும் நம்முடைய விருப்பங்களை பூர்த்திசெய்கிறவராகவும் இருக்கிறார். அவருக்கே நாம் துதிகளை செலுத்த வேண்டும்.

போன மாதத்தில் ஒரு சில நிகழ்ச்சிகளை நடத்துவதற்கு தேவன் உதவி செய்தார். Whitefield Methodist திருச்சபையில் அறுவடை பண்டிகையை அனுசரிக்க உதவி செய்தார். ஜெப கருத்தரங்கு முடிவடைய உதவி செய்தார். அவருக்கே துதிகளை செலுத்துவோம். இந்த மாதத்தில் முதல் வாரத்தில் Bethel Methodist திருச்சபையின் ஆங்கில திருச்சபைக்கான அறுவடைப் பண்டிகையை கொண்டாட இருக்கிறோம். (7th அக்டோபர்). மேலும் இரண்டாவது வாரத்தில் Teens and Youth இணைந்து ஆலய ஆராதனையை நடத்த இருக்கிறார்கள். இவைகளுக்காக நாம் ஜெபிக்கவேண்டும்.

இந்த மாதத்தில் ***"ஆண்டவரிடமிருந்து அடியார்களை அகற்றிவிடும் அதிக ஆசை"*** என்ற கருத்தின் அடிப்படையில் தியானம் செய்ய இருக்கிறோம். பணத்தின் உபயோகம் நம் வாழ்வில் இன்றியமையாததாக இருக்கிறது. அது இல்லாமல் நாம் இந்த உலகத்தில் வாழமுடியாது. ஊதாரணமாக உணவுக்கு, போக்குவரத்திற்கு, வீட்டு உபயோகபொருட்கள் வாங்குவதற்கு, மருந்துக்கள் வாங்குவதற்கு, உடைகள், வாகனங்கள் வாங்குவதற்கு பணம் தேவை. பணம் இல்லாமல் எங்கும் அசையமுடியாது.

வேதம் பணத்தின் உபயோகத்திற்கு எதிராக ஒருபோதும் பேசினது இல்லை. ஆனால் பணத்தின் மீது பேராசை கொள்வதை வேதம் கடிந்து கொள்கிறது. பணம் முக்கியமானதாக இருந்தாலும் அதைக் கொண்டு வாழ்க்கையை வாங்க முடியாது. பணம் நித்தியத்திற்கும் வழி நடத்தாது. ஒரு-வரும் இப்பூமியில் நீண்ட நாள் வாழ்வதற்கு தேவனுக்கு லஞ்சம் கொடுக்கமுடியாது. பணத்தின் மீதுள்ள பேராசை பணத்தின் மீது மாத்திரம் கவனத்தை செலுத்தசெய்கிறது. தேவனிடத்தில் அல்ல. யார் நமக்கு முக்கியம் தேவனா, பணமா? பணம் இந்த உலகத்திற்குரியது. பரலோகத்தில் பணம் கிடையாது. பணத்தின் மீதான பேராசை வாழ்வில் துன்பங்களை அனுபவிக்க செய்கிறது. சில வேளைகளில் பணம் சம்பாதிக்க குறுக்கு பாதையை தெரிந்தெடுக்க உதவி செய்கிறது. இதன் மூலம் ஒருவன்/ஒருத்தி தன்னை உருவகுத்திக் கொள்ள செய்கிறார்கள். ஒருவன் பணம் சம்பாதிக்க இயந்திரமாக மாறுகிறான். அதுவே வாழ்வின் ஒரே வழி என நம்புகிறான். இங்கே தேவனுக்கும் நண்பத்துவத்தின் உறவுக்கும், குடும்பத்தின் ஐக்கியத்திற்கும் இடமில்லாது போகிறது.

வேதம் மனிதர்களை வேலை செய்யும்படியும், பணம் சம்பாதிக்கும்படியும் சொல்லுகிறது. ஆனால் புத்தியற்றவர்களாக அதின் பிறகே இருக்கும்படி சொல்லவில்லை. பணத்தை நேசிக்கிறவன் வாழ்க்கையை விட்டுவிடுகிறான். இது உடல்ரீதியான ஆவிக்குரிய வாழ்க்கைக்கு பொருந்தும்.

வேதத்தில் இருந்து ஒரு உதாரணத்தை குறிப்பிட விரும்புகிறேன். ஒரு இளம் வாலிபன் இயேசுவினிடத்தில் வந்து நித்திய இராஜ்ஜியத்தை சுதந்தரித்து கொள்ள நான் என்ன செய்ய வேண்டும் என்று கேட்டான். நித்தியத்தில் வாழ்வதற்கு தடையான பணத்தின் மீது நாட்டம் இருந்ததால் மனவருத்தத்தோடு சென்றுவிட்டான் (மத்தேயு 19:22).பரிசுத்த பவுல் இளம் ஊழியரான தீமோத்தேயுவுக்கு எச்சரித்து எழுதும் போது நீ பண ஆசையில் இருந்து விலகி ஓட வேண்டும் என்றும், மேலும் பண ஆசையை விட்டுவிட்டு வேறு முக்கியமான சிலவற்றை பின்பற்றும்படி ஆலோசனை கொடுக்கிறா ் (I தீமோத்தேயு 6:10,11).நாம் இந்த கருத்தின் அடிப்படையில் இந்த மாதத்தில் தியானம் செய்யும் போது, ஆலயத்திற்கு தவறாது வந்து தேவனுடைய ஆசீர்வாதத்தை பெற்றுக்கொள்வோம். இந்தமாதத்தில் விசேஷித்த நாட்களை கொண்டாடுகிற அனைவருக்கும் என்னுடைய வாழ்த்துக்கள். தேவன் உங்கள் அனைவருக்கும் விசேஷித்த ஆசீர்வாதத்தை தர ஜெபிக்கிறேன்.

தேவன் உங்கள் அணைவரையும் ஆசீர்வதிப்பாராக!

இப்படிக்கு

திருச்சபையின் பணியில்

அருள்திரு. கோயில்ராஜ்.

## வாழ்க்கை வரலாறு - 15 - அருள்திரு கோயில்ராஜ்.

### ரூபன் - பஞ்சாகமம்

**பெயரின் பொருள் :** “கர்த்தர் என் சிறுமையைபார்த்தருளினார்”

**குடும்பம்:**

| | |
|---|---|
| தகப்பன் பெயர் | : யாக்கோபு |
| தாயின் பெயர் | : லேயாள் |
| சகோதரன் பெயர் | : சிமியோன், லேவி, யூதா, தாண், நப்தலி, காத், ஆசேர் இசக்கார், செபுலோன்,யோசேப்பு& பென்யமீன் |
| சகோதரிபெயர் | : தீனாள் |
| குமாரர்கள் | : ஆனோக்கு,பல்லூ, எஸ்ரோன்,கர்மீ |
| தாத்தாபெயர் | : ஈசாக்கு |
| பாட்டிபெயர் | : ரெபெக்காள் |

**வரலாறு :**

* இவர் யாக்கோபுக்கு பிறந்த முதல் மகன்.
* இவர் பாதான் அராமில் பிறந்தார். (ஆதி.29:32)
* இவர் ரூபனியருடைய கோத்திரத்துக்கு தந்தை என்று அழைக்கப்பட்டார்.

**வாழ்த்துவதற்கு:**

* இவர் தூதாயீம் கனியைதன் தாய்க்கு கொடுத்து மறுபடியும் பிள்ளை பிறப்பதற்கு உதவிசெய்தார். (ஆதி.30:14)
* இவர் பாசம் மிகுந்தவராக யோசேப்பை கொலை செய்யகூடாது என்று தன் சகோதரர்களிடம் சொன்னார்.(ஆதி.37:22,29)
* இவர் தன் சகோதரர்களோடு எகிப்தில் சந்தித்த பிரச்சினைகள் யாவும் யோசேப்புக்கு துரோகம் செய்ததின் லம் கிடைக்க பெற்ற பரிசு என்று தன் சகோதரர்களிடம் சொன்னார்.(ஆதி.42:22)
* இவர் தன் தகப்பனாரிடம் பெஞ்சமினுக்காக தன் இரண்டு குமாரரின் உயிரையும் பணயம் வைத்தார்.(ஆதி.42:37)

**வருந்துவதற்கு:**

* இவர் தன் சகோதரி தீனாள் காரியத்தில் மவுனமாயிருந்தார்.
* இவர் தன் தகப்பனுடைய மறுமனையாட்டியாகிய பில்காளோடு தவறாக நடந்து கொண்டு தகப்பனுடைய மஞ்சத்தை தீட்டுப்படுத்தினார்.(ஆதி:35:22)
* இவர் தவறாக நடந்ததின் நிமித்தம் தன் சேஷ்ட புத்திர பாகத்தை இழந்துவிட்டார்.(ஆதி.49:4; I நாளா5:1)
* இவருடைய கோத்திரம் ஒரு சில காலங்களுக்கு பிறகு தலைமைத்துவம் பெற்றதில்லை. (எண்.1:5,20)

**மனதில் பதிப்பதற்கு:**

ஒரு தவறு கூட ஆண்டவரின் ஆசீர்வாதத்தை இழப்பதற்கு வழி நடத்தும்.

## BIOGRAPHY - 15 - Rev. P. Koilraj

### REUBEN – PENTATEUCH

**Meaning of the Name:** “The Lord hath looked upon my affliction”

**FAMILY:**

| | |
|---|---|
| Father’s name | : Jacob |
| Mother’s name | : Leah |
| Brothers’ names | : Simeon, Levi, Judah, Dan, Naphtali, Gad, Asher, Issachar, Zebulun, Joseph & Benjamin |

Sister's name : Dinah
Sons' names : Hanoch, Pallu, Hezron and Carmi
Grandfather's name : Isaac
Grandmother's name : Rebekah

**HISTORY:**

* He was Jacob's first son.
* He was born in Paddan Aram. (Gen,29:32)
* He was called the Father of Reubenites.

**TO REWARD:**

He was compassionate and wanted to rescue his brother Joseph from the other brothers. (Gen.37: 22,29)
He made his brothers realize that all the troubles they faced in Egypt were the reward for mistreating their brother Joseph.(Gen.42:22)
He showed his responsibility by offering his 2 sons as a guarantee for Benjamin's safety to his father. (Gen.42:37)

**TO REGRET:**

* He was silent in Dinah's issue.
* He slept with Bilhah, his father's concubine. (Gen.35:22)
* He lost his birthright because of his misbehavior.(Gen.49:4; I Chro.5:1)
* His tribe never took the lead in Israel after that time. (Num.1:5,20)

**THOUGHT TO REMEMBER**

Even one mistake can sometimes make us lose God's blessings.

## Kids Corner

- Mrs. Iris Irwin

### Bible Wordsearch

**Peter the Rock**

Wordsearch 270 Matt.16:17-28

| | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| D | N | U | O | B | L | F | O | R | F | E | I | T | S | C |
| A | S | Y | E | K | D | I | C | R | O | S | S | B | H | R |
| N | D | N | I | H | E | B | T | R | U | T | H | U | B | E |
| G | R | L | S | U | S | E | J | W | E | D | R | I | E | T |
| E | A | U | S | T | O | N | O | A | E | C | N | L | L | E |
| L | W | O | E | N | O | R | C | S | H | D | T | D | D | P |
| S | E | S | O | M | L | H | I | B | F | A | T | H | E | R |
| C | R | T | I | D | E | A | D | P | L | G | G | M | R | H |
| S | O | S | S | R | R | E | Y | R | E | E | A | O | S | A |
| E | C | M | S | I | N | R | Y | I | W | K | S | T | O | N |
| D | G | Y | I | R | R | R | F | E | T | O | U | S | E | D |
| A | O | A | A | N | O | H | R | S | V | A | L | B | E | S |
| H | M | W | I | L | G | C | C | T | E | A | S | L | E | D |
| M | O | D | G | N | I | K | K | S | R | C | S | T | O | R |
| J | O | N | A | H | S | Y | N | E | V | A | E | H | E | F |

| | |
|---|---|
| BIND | ANGELS |
| BOUND | BEHIND |
| BUILD | BLESSED |
| CHRIST | CHURCH |
| CROSS | COMING |
| GAINS | ELDERS |
| GATES | FATHER |
| GLORY | FOLLOW |
| GOOD | FORFEITS |
| HADES | HEAVEN |
| HANDS | KINGDOM |
| JESUS | LOOSED |
| JONAH | PRIESTS |
| KEYS | REBUKE |
| PETER | REWARD |
| ROCK | TEACHERS |
| SAVE | RAISED |
| SIMON | TRUTH |
| SOUL | WARNED |
| TASTE | WORLD |

After you find all the hidden words the left over letters spell out a Bible verse reading from the top left to the bottom right

___ ___ ___ ___ ___ ___ ___   ___ ___   ___ ___

___ ___ ___   ___ ___ ___   ___ ___ ___ ___ ___

MORE PUZZLES AT: http://biblewordgames.com COPYRIGHT 2018 ALL RIGHTS RESERVED

**<u>யோசனையில் பெரியவர்</u>** - டாக்டர். சாலமன் புஷ்பராஜ்

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்களை வாழ்த்துகிறேன். நம்முடைய ஆண்டவர் யோனாவிலும் பெரியவர் மாத்திரமல்ல (மத்தேயு 12:41) சாலமோனிலும், தேவாலயத்திலும் பெரியவராய் இருக்கிறாராம் (மத்தேயு 12:42, 12:6) அவர் யோசனையில் எப்படிப்பட்டவர் என்பதை நாம் எரேமியா 32:19 இல் வாசிக்கலாம். யோசனையில் பெரியவரும் செயலில் வல்லவருமாய் இருக்கிறார். ஆம் பிரியமானவர்களே, அவர் யோசனையில் பெரியவராம். ஏசாயா 9:6 ஆம் வசனம் அவர் ஆலோசனைக் கர்த்தா என்று சொல்லுகிறது. நீதிமொழிகள் 21:30 ஆம் வசனம் கர்த்தருக்கு விரோதமான ஞானமுமில்லை, புத்தியுமில்லை, ஆலோசனையுமில்லை என்று கூறுகிறது. 1 சாமுவேல் 2:3 ஆம் வசனம் கர்த்தர் ஞானமுள்ள தேவன் என்று கூறுகிறது.

இந்த ஞானமுள்ள தேவன் சங்கீதம் 32:8 இல் 'நான் உனக்குப் போதித்து, நீ நடக்க வேண்டிய வழியை உனக்குக் காட்டுவேன், உன் மேல் என் கண்ணை வைத்து உனக்கு ஆலோசனை சொல்லுவேன்' என்று சொல்லுவது நமக்கு ஆச்சரியத்தை தருகிறது. ஞானமுள்ள தேவன் நமக்கு ஆலோசனைக்காரராக விரும்புகிறாராம். எத்தனை பெரிய பாக்கியம் இது. அவர் நமக்குப் போதிப்பாராம், நடக்க வேண்டிய வழியைக் காட்டுவாராம். நம் மேல் தன் கண்ணை வைத்து நமக்கு ஆலோசனை சொல்லுவாராம். நாம் தேவனை நம்முடைய ஆலோசனைக்காரராக ஏற்றுக்கொள்ள தயாராக இருக்கிறோமா? தேவனிடம் ஆலோசனை கேட்ட சிலரைக் குறித்தும், தேவனின் ஆலோசனை அவர்களுக்கு எப்படி உதவிகரமாக இருந்தது என்பதைக் குறித்து இந்த மாதத்தில் பார்க்க இருக்கிறோம்.

### 1) அழிவிலிருந்து பாதுகாக்கப்பட உதவிய தேவ ஆலோசனை

நேபுகாத்நேச்சார் ஒரு சொப்பனம் கண்டான். அந்த சொப்பனத்தையும் அதின் அர்த்தத்தையும் அறிவிக்க வேண்டும், இல்லை என்றால், பாபிலோனில் இருக்கிற எல்லா ஞானிகளையும் கொலை செய்யும்படி கட்டளையிட்டான் (தானியேல் 2:12, 13). தானியேல் 2:17 ஆம் வசனத்தில் "பின்பு தானியேல் தன் வீட்டுக்குப் போய், தானும் தன் தோழரும், பாபிலோனின் மற்ற ஞானிகளோடு அழியாதபடிக்கு, இந்த மறைபொருளைக் குறித்து, பரலோகத்தின் தேவனை நோக்கினான்" என்று பார்க்கிறோம். தானியேல், தேவனிடம்

ஆலோசனை கேட்டான். ஆண்டவரே, நீர் மறைபொருளை வெளிப்படுத்தும் என்று இராக்காலத்தில் தேவனை நோக்கி விண்ணப்பம் பண்ணினான். தேவன், அவனின் ஜெபத்தைக் கேட்டு, இராக்காலத்தில், தரிசனத்திலே மறைபொருளை வெளிப்படுத்தினார் (தானியேல் 2:19) . தானியேல், நேபுகாத்நேச்சாரின் மறைபொருளை வெளிப்படுத்தினான். நடந்தது என்ன? தானியேல் 2:46-49 ஆம் வசனங்கள் இவ்விதமாய் கூறுகிறது. நேபுகாத்நேச்சார் முகங்குப்புற விழுந்து, தானியேலை வணங்கி, அவனுக்கு காணிக்கை செலுத்தவும், தூபங்காட்டவும் கட்டளையிட்டானாம். தானியேலை பெரியவனாக்கினான். சிறந்த வெகுமதிகளைக் கொடுத்தான். சகல ஞானிகளின் மேலும் பிரதான அதிகாரியாகவும் நியமித்தான். தானியேலை அழிவிலிருந்து பாதுகாத்து, வேலை பார்க்கும் இடத்தில் உயர்வை கட்டளையிட்டது தேவனுடைய யோசனை அல்லவா? ஆம் பிரியமானவர்களே, தேவனுடைய ஆலோசனை, நம்முடைய அழிவை மாற்றி நமக்கு உயர்வை கொடுக்கக் கூடியதாய் இருக்கிறது. தேவனுடைய ஆலோசனைக்காக, தானியேலைப் போல, நாமும் அவரை நோக்கிப் பார்ப்போமா?

2) **இழந்த அனைத்தையும் திரும்ப பெற உதவிய தேவ ஆலோசனை**

1 சாமுவேல் 30 ஆம் அதிகாரத்தில், சிக்லாகு என்ற இடத்தில் தாவீதுக்கு நடந்த நெருக்கமான காரியத்தைப் பார்க்கலாம். அமலேக்கியர் வந்து பட்டணத்தைச் சுட்டெரித்து, கொள்ளையடித்து, சிறியவர்களையும் பெரியவர்களையும் சிறைபிடித்துக்கொண்டு போனார்கள். தாவீதோடு இருந்த மனிதர்கள் அவனை கல்லெறிய வேண்டும் (1 சாமுவேல் 30:6) என்று சொல்லிக்கொண்டார்கள். தாவீது மிகவும் நெருக்கப்பட்டான். தன்னுடைய குடும்பத்தினரையும் அவன் இழந்திருந்தான். பொருட்களையும் இழந்திருந்தான். எல்லாம் கொள்ளையடிக்கப்பட்டு விட்டது. அந்த நிலையில் தாவீது என்ன செய்தான் தெரியுமா? 1 சாமுவேல் 30:8 ஆம் வசனத்தில், “தாவீது கர்த்தரை நோக்கி, நான் அந்த தண்டைப் பின் தொடர வேண்டுமா? அதை பிடிப்பேனா? என்று கேட்டான். தாவீது யுத்த வீரனாய் இருந்த போதும், கோலியாத்தை ஒரே கல்லினால் வீழ்த்தினவனாய் இருந்த போதும், ஒரு சிறு குழந்தையைப் போல அவன் தேவனிடம் ஆலோசனை கேட்டான். விளைவு என்ன? ஆண்டவர் அவனுடைய விண்ணப்பத்திற்கு பதில் கொடுத்தார். 1 சாமுவேல் 30:8 ஆம் வசனத்தில், “அதற்கு அவர்: அதைப் பின் தொடர், அதை நீ

பிடித்து, சகலத்தையும் திருப்பிக் கொள்வாய் என்றார்” தாவீது, தேவனுடைய ஆலோசனையின்படி செயல்பட்டான். விளைவு என்ன தெரியுமா? 1 சாமுவேல் 30: 18, 19 ஆம் வசனங்களில் அமலேக்கியர் பிடித்துக் கொண்டு போன எல்லாவற்றையும் தாவீது திருப்பிக் கொண்டான் என்று பார்க்கிறோம். இழந்து போன எல்லாவற்றையும் தாவீதுக்கு திருப்பிக் கொடுத்தது எது?அவன் தேவனிடம் பெற்ற ஆலோசனை அல்லவா?

3) **ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ள உதவிய தேவ ஆலோசனை**

யோவான் 21: 1-11 ஆம் வசனங்களில், சீஷர்கள் இரா முழுவதும் பிரயாசப்பட்டும் ஒரு மீனையும் பிடிக்கவில்லை என்பதை நாம் பார்க்கலாம். எல்லோரும் கைதேர்ந்த மீனவர்கள்தான். ஆனாலும், அந்த இரவு, அவர்கள் ஒன்றும் பிடிக்கவில்லையாம். விடியற்காலமான போது, இயேசு வந்து அவர்களுக்கு ஒரு ஆலோசனை வழங்கினார். “ நீங்கள் படவுக்கு வலதுபுறமாக, வலையைப் போடுங்கள், அப்பொழுது உங்களுக்கு அகப்படும் என்றார்” நடந்தது என்ன? அப்படியே, சீஷர்கள், இயேசுவின் ஆலோசனைக்கு கீழ்ப்படிந்து, திரளான மீன்களைப் பிடித்தார்கள். நண்பனே!, ஒன்றும் இல்லாதவர்களை, திரளான மீன்களைப் பிடிக்கும்படியாக மாற்றியது மனிதனின் ஆலோசனையா? இல்லை, இயேசுவின் ஆலோசனை. இயேசுவின் ஆலோசனையால் திரளான மீன்களைப் பிடித்தார்கள்.

4) **ஆத்தும ஆதாயம் செய்ய உதவிய தேவ ஆலோசனை**

அப்போஸ்தலர் 8: 26-39 ஆம் வசனங்களில், பிலிப்புவை தேவன் எப்படி பயன்படுத்தினார் என்பதை பார்க்கலாம். எத்தியோப்பியருடைய ராஜஸ்திரீயாகிய கந்தாகே என்பவளுக்கு மந்திரியும், அவளுடைய பொக்கிஷமெல்லாவற்றிற்கும் தலைவனுமாய் இருந்த எத்தியோப்பியன் ஒருவன் எருசலேமுக்கு வந்து, தன்னுடைய ஊருக்கு திரும்பிப் போகும் போது, தேவன் பிலிப்புவிடம் நீ போய், அந்த இரதத்துடனே சேர்ந்து கொள் என்றார். அப்படியே தேவ ஆலோசனைக்குக் கீழ்ப்படிந்து அவன் போன பொழுது நடந்தது என்ன? மந்திரி ஏசாயா தீர்க்கதரிசன புத்தகத்தை வாசித்துக் கொண்டிருந்தான். பிலிப்பு, “நீர் வாசிக்கிற புத்தகத்தின் கருத்து என்ன தெரியுமா” என்று கேட்டான். மந்திரி, தன்னோடு உட்கார்ந்து வேத புத்தகத்தின் கருத்தை விளக்கிச் சொல்லும்படி வேண்டிக்கொண்டான். நடந்தது என்ன? மந்திரி, இயேசு கிறிஸ்துவை தேவனுடைய குமாரனென்று முழு இருதயத்தோடு விசுவாசித்தான். உடனே

ஞானஸ்நானத்தையும் பெற்றுக்கொண்டான். நண்பரே!, உயர் பதவியில் உள்ளவர்களுக்கும், ஆண்டவரை அறிவிக்க நமக்கு என்ன தேவை தெரியுமா? ஆண்டவரின் ஆலோசனை. தேவ வழிநடத்துதலால், பிலிப்பு, எத்தியோப்பியா நாட்டு மந்திரிக்கே, சுவிசேஷத்தை அறிவித்து அவனை தேவனுடைய பிள்ளையாய் மாற்றிவிட்டான்.

நம்முடைய ஆண்டவர், ஆலோசனையில் பெரியவர். நமக்கு ஆலோசனை கொடுக்க தயாராக இருக்கிறார். எரேமியா 33:3 இல் “என்னை நோக்கி கூப்பிடு, அப்பொழுது, நான் உனக்கு உத்தரவு கொடுத்து, நீ அறியாததும், உனக்கு எட்டாததுமான பெரிய காரியங்களை உனக்கு அறிவிப்பேன்” என்கிறார். நம்முடைய வேலைக்காக, திருமண காரியங்களுக்காக, தேவனுடைய ஆலோசனையை நாடுவோமா? தேவனை நோக்கிக் கூப்பிடுவோமா? துன்மார்க்கருடைய ஆலோசனையில் நடவாமல், தேவ ஆலோசனையில் நடந்து ஆசீர்வாதங்களை பெற்றுக்கொள்வோம். நம் ஆண்டவர் யோசனையில் பெரியவர். ஆமென்.

## ஜெபிக்கும் ஒழுக்கம் - D.C Franklin & Noel Thomas

நம்முடைய பிரசங்க பீடத்திலிருந்து **எபேசியர் 6: 11-17**ல் தற்காப்புக் கவசம் மற்றும் தாக்குதலுக்குரிய ஆயுதங்களை அணிந்துகொண்டு ஆவிக்குரிய போருக்கு பவுல் நம்மை அழைக்கிறார் என்பதைக் கடந்த சில வாரங்களாக நாம் தியானித்தோம். “ஏனெனில், மாம்சத்தோடும் இரத்தத்தோடுமல்ல, துரைத்தனங்களோடும், அதிகாரங்களோடும், இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும், வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டம் உண்டு”. கிறிஸ்துவின் சீடன் ஒழுக்கம் நிறைந்த தேவனின் போர்வீரன்.

வசனம் 18ல் பவுல் தேவனின் சர்வாயுத வர்க்கத்தை அணிந்து கொண்ட போர்வீரனை நோக்கி: “எந்தச் சமயத்திலும் ஆவியிலே ஜெபம்பண்ண அழைக்கிறார்.

ஈ.எம்.பவுண்ட்ஸ் இவ்வாறு கூறுகிறார்: "ஜெபத்தோடு இனைக்கப்படாமல் கிரிஸ்தவரின் கவசம் ஒன்றுக்கும் பயன்படாது. ஜெபம் கவசத்தின் இணைப்புக்களை வலுப்படுத்தி மிகவும் பயனுள்ளதாக்குகிறது. தேவனின் உண்மையான சிப்பாய் தனது முயற்சிகளைத் திட்டமிட்டு, தனது போர் சக்திகளை ஒழுங்குபடுத்தி, ஜெபத்தோடு தன் போர்களை நடத்துகிறார். ஜெபம் வெற்றிக்கு மிகவும் அவசியமானது, வெற்றிக்கு இன்றியமையாதது. அவனது மூச்செல்லாம் ஜெபம், ஒவ்வொரு பெருமூச்சு ம் வேண்டுதல். தேவனின் போர்வீரனுக்கு போரிடுவதே வாழ்க்கை, அவன் ஜெபித்துக்கொண்டே போரிடவேண்டும்”.

வசனம் 18: *“எந்தச் சமயத்திலும் சகலவிதமான வேண்டுதலோடும் விண்ணப்பத்தோடும் ஆவியினாலே ஜெபம்பண்ணி, அதன்பொருட்டு மிகுந்த மனவுறுதியோடும்* **Continued in Page-17**




# The First – Aid Box

By - Ms. Ruth Christopher

One of the first things I noticed, that day, after I boarded the bus was the First - Aid Box. Painted in white and bold in red, above it read "First-Aid Box". It was just a usual sight but what captured my attention is the box kept empty. This triggered a thought around a moment of sudden urgency, what will be the plight of the passengers?

Swiftly, I was nudged to ponder a similar moment of urgency identified as PEOPLE NEED THE LORD. We have co-passengers journeying through life with us for eternity. The only difference is, will their destination be eternal life or eternal condemnation?

The question is how are we going to respond to this moment of urgency – *People need the Lord*. For the record the reality check affirms that most times you are the only first aid box/kit who contains the good news as a medicine to those needy souls.

Well, now that you realize the criticality of the situation, your response to *People need the Lord* must be complete and ready to use.

**Should I be experienced?**

To be complete is to know Jesus, as your Savior. He is the God who loves you, who purchased you with His precious blood and lives today to see you through life into eternity with Him.

Have you had a chance to invite Him to be part of living by confessing your sins, believing in what He has done for you on the cross

and trusting Him to be the Lord of your life? Then come on, there is no time to waste, you are complete.

**What's the message again?**

Sometimes we chose to ignore the moment of urgency just because you are not quite sure what has to be said. I Peter 3:15 says, always be ready to give an answer to everyone who asks you to give the reason for the hope that you have. But do this with gentleness and respect.

*Here is what you can say:*

- God loves you
- Your sin separates you from a loving God
- God, in His love for you sent Jesus His Only Son to this earth. He took the cross for your sin's punishment, died there and was buried. On the third day He came alive. Today He is alive
- Jesus will be part of your life if you ask Him to come and live with you. All you have to do is
    - Accept you have sinned, believe that He took your sin's punishment, Choose Jesus for life
- Jesus wants you to grow in Him by reading God's word, praying, obeying and witnessing for Him

This keeps your feet prepared with the gospel (Ephesians 6:15) and thus you are not only complete but ready as well.

The sudden moment of urgency in the bus with the first -aid box empty, will leave many lives without hope. Let's remember not being prepared for the moment of urgency – PEOPLE NEED THE LORD, will make us look as beautiful Christians on the outside but incomplete without Christ and hopeless to the perishing world around us like the empty first aid box/kit.

***People need the Lord and You are The One with the answer!***

The situation is critical, choose for yourselves this day how you would respond!

# Prayer Diary - A point a day

**Compiled by Mr. Dilip**

1. **New month** - Let us thank God for His protection and provision the last nine months. As we enter the last quarter of the year, let us fully recommit ourselves in His hands so that we can be the light and salt of the earth.
2. **Gandhi Jayanthi** - Praise our LORD for leaders like Gandhi. Let us pray that our LORD will raise many Josephs, Daniels, Deborahs, with an excellent spirit (Daniel 6:3) for the nation to see and turn to the Creator.
3. **Rev. Koilraj and family** - Let us thank God for the service of our Pastor in our Church. Let us pray for God's abundant blessing on him, his wife and children.
4. **Rev. Joshua Das and family** - Let us thank God for the service of our Asst. Pastor in our Church. Let us pray for God's choicest blessings on him and his wife. Let us also remember Mrs. Joshua Das' ministry in the Methodist School in Kolar.
5. **Lay preachers** - Let us thank God for the lay preachers He has raised in our Church. Let us pray that God continues to use them and fulfill His purposes in their families.
6. **Sunday School Teachers and Volunteers** - Let us thank God for the committed and gifted Sunday School teachers and volunteers. Let us pray that this ministry which our Church is heavily investing in will bear much fruit.
7. **Harvest Festival for English Congregation** - As we thank God for everything He is and his blessings in our lives, let us pray that all the offerings will be a sweet smelling sacrifice to Him.
8. **Committee members** - Let us thank God for all the honorary committee members. Let us pray that all decisions taken will be according to His perfect will.
9. **Area Fellowship leaders** - Let us thank God for all the area fellowships, where we are able to meet and grow in the Lord. Let us pray for all the leaders, that they be able to guide the fellowships in God's way.
10. **Sexton and family** - Let us thank God for the new sexton and his family. Let us pray that they will serve joyfully and that it will be a great blessing to their family.
11. **Students who are away from home** - Let us thank God for all the students who worship in our Church. Let us pray especially for those who are away from home, that they will abide in Him, excel in their studies and participate in Church activities.
12. **Those who have joined work and come to the city** - Let us thank God for all the new young people who have moved to the city and are

worshipping at our Church. Let us pray that God will bless their work and use them fully according to His divine plan.

13. **Those waiting for children** - Let us thank God for all the families in our Church. Let us in particular remember those who are waiting for the blessing of children, that, though it may seem to be delayed, their joy will be as Hannah, Zechariah and Mary.
14. **Teens and Youth Sunday** - Let us thank God for the active involvement of our teens and youth in Church. Let us pray that we will provide them with sound teaching and more importantly a living example to follow.
15. **Those looking for jobs** - Let us thank God for the education that we have received. Let us pray for those looking for jobs that God will quickly bring them to the place where they are to work for His glory.
16. **Guest speakers** - Let us thank God for the open door we have for guest speakers. Let us pray for their ministries, that many will come to the Lord.
17. **Mission organizations we participate with** - Let us thank God for all the mission organizations like COME, IEM, Raichur Home... we partner with and organizations like EU, GEMS, BYM, IEM where we have gone for mission trips. Let us pray that we as a Church will fulfill our responsibilities towards them.
18. **Members who have moved to other cities, countries** - Let us thank God for the service of members who previously worshipped with us. Let us pray that God will continue to use them in the new places where He has taken them.
19. **Those waiting for life partners** - Let us pray for those ready and looking for life partners, that God will bless them with life partners and families which will bring them exceeding joy and be used for the extension of His kingdom.
20. **Visitors to Church** - Let us thank God that the Church is open for sometime on weekdays as well. Let us pray for all those who visit the Church during non-service times or who look at the Church saying a prayer with expectation, that God will bring them to His fold.
21. **Quarterly Quiz** - Let us thank God for the opportunities we have to learn His word systematically. Let us pray that the quarterly quiz will help us practically apply all Biblical principles in our lives.
22. **Whitefield Methodist Church** - Let us thank God for all the ministries of WMC. Let us pray for a breakthrough in purchasing a land and building a Church for His glory.
23. **Sarjapur Road Methodist Church** - Let us thank God that like WMC, a Church has been formed in Sarjapur Road. Let us pray for their project 'Arise and Build' to raise funds for a land and thereafter to build a Church.

24. **Koramangala Methodist Church** - Let us thank God for KMC and its ministries. Let us pray for the easy renewal of the lease or better full purchase of the land from the Government.
25. **Mogalapalli Outreach** - Let us thank God for helping us start partnering with Bro. Mark and his family in this outreach. Let us pray that we will be able to solidly stand with this ministry and bring many villages to His fold.
26. **Irula Outreach** - Let us thank God that some of our Church members are able to regularly visit and minister here. Let us pray for the full transformation of all who attend various programs like Sunday School, VBS, Christmas.
27. **Priyankanagar Outreach** - Let us thank God for what He has done in this outreach thus far. Let us pray for the proposed place we plan to build, that it will come to pass and be a blessing to many.
28. **Sadarmangala Outreach** - Let us thank God for the regular ministry in this area. Let us pray that the full purpose of the ministry here will be fulfilled.
29. **Needy families in our outreaches** - There are many needy families in all our outreaches, in need of finance, in need of education, in need of medical attention, in need of protection against exploitation, etc. Let us pray for them and as individuals/families let us specifically involve with them on a one-on-one basis.
30. **Employers/Employees** - Let us pray for our employers, people or organizations we work for. Let us pray that they will know the living God and work with justice and mercy. Let us pray for those who work for us, that they will know the living God as we display God's kindness to them and share God's Word with them.
31. **Our Nation** - Let us pray fervently for our nation, for our leaders, our city of Bangalore, our native places, our state of Karnataka and other needy places. Let us pray for the stability of the coalition government in our state and for the General Elections in 2019, that the government that will be elected will work with justice for the people.

**இம்மாதத்தில் பிறந்த நாள் மற்றும் திருமண நாள் காணும் அனைவரையும் சபையின் சார்பாக வாழ்த்துகிறோம். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக!**

